# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 21/ந/2025, நாள் 19.12.2025

R.Ma. பார்த்தீபன்,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மன்னார்குடி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஆசாத்தெரு, எண்.53/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.Ma. பார்த்தீபன், என்பவரது 19.12.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2024 அன்று பெறப்பட்டு, 21/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஆசாத்தெரு, எண்.53/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.Ma.பார்த்தீபன், என்பவரது 19.12.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

“மன்னார்குடி நகராட்சி, மேலவாசல் வார்டு, பிளாக் 3, நகர சர்வே எண். 80/1, பாமணியாற்றின் சர்க்கார் புறம்போக்கு கடும் ஆட்சேபனைக்கு உரிய நீர்த்தடங்கல் நிலமாகும். இதனை ஆக்கிரமிப்பு செய்து இருந்த ஆக்கிரமிப்பாளரை அப்புறப்படுத்தி ஆக்கிரமிப்பு அண்மையில் நீக்கப்பட்டது. மீண்டும் தற்போது அதே இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளது. நகராட்சி நடவடிக்கை எடுத்து அதனை முழுமையாக ஆக்கிரமிப்பு நீக்கம் செய்து, ஆக்கிரமிப்பு நீக்கம் செய்ததை உறுதி செய்யவேண்டும்”. எனத்தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரது புகார் குறித்து மன்னார்குடி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 25.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) மன்னார்குடி நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.2558/2024/எப்1, நாள் 04.08.2025ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"திரு. R.Ma. பார்த்தீபன் என்பவர் வார்டு எண். 3, பிளாக் 3, நகரளவு எண். 80/1-ல் தெரிவிக்கப்பட்டுள்ள இடம் நீர்தடங்கல், பாமணி ஆறு படுகை பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால், மேற்படி ஆக்கிரமிப்புகளை நகராட்சியால் அகற்ற இயலாது. பொதுப்பணித்துறை (WRO), மன்னார்குடி மூலம் அகற்றப்பட வேண்டும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' எனத்தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் ஆகியோரை 05.08.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6) எதிர் மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் சார்பில் மன்னார்குடி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக பணியாற்றி வரும் திரு. ரா.கண்ணதாசன் என்பவர் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மன்னார்குடி நகராட்சி, மேலவாசல் வார்டு, பிளாக் 3, சர்வே எண்.80/1, பாமணியாற்றின் சர்க்கார் புறம்போக்கு நீர் தடங்கல் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்த ஆக்கிரமிப்பாளரை அப்புறப்படுத்தி ஆக்கிரமிப்பு அண்மையில் நீக்கப்பட்டது என்றும், மீண்டும் தற்போது அதே இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளதாக மனுதாரர் புகார் கூறியுள்ளார். மனுதாரர் தெரிவித்துள்ள சர்வே எண்.80/1–ல் உள்ள நிலமானது பொதுப்பணித் துறைக்கு சொந்தமானதால் நகராட்சியால் இதுநாள்வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விவரத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற நகராட்சியில் இருந்து பொதுப்பணித் துறைக்கு கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினையும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன். என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரர் திரு. R.Ma. பார்த்தீபன் அவர்கள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 05.08.2025 நாளிட்ட மின்னஞ்சலில் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என தெரிவித்து, தனக்கு மாற்று தேதியில் விசாரணை நடத்திடுமாறு கோரியிருந்தார். மனுதாரரது கோரிக்கையினை ஏற்று அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு 25.09.2025 அன்று நடைபெறும் மறுவிசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 18.09.2025 அன்று அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8) மனுதாரர் திரு. R.Ma.பார்த்தீபன் 25.09.2025–ல் நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட மேலவாசல் வார்டு, பிளாக் 3, நகர சர்வே எண். 80/1ல் உள்ள ஆட்சேபனைக்குரிய பாமணியாற்றின் சர்க்கார் புறம்போக்கு கடும் நீர்த்தடங்கல் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்த ஆக்கிரமிப்பாளரை அப்புறப்படுத்தி, ஆக்கிரமிப்பு அண்மையில் நீக்கப்பட்ட நிலையில், மீண்டும் அதே இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்றங்கரை புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளனர். ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு நகராட்சியால் வரி கேட்பு வழங்கப்பட்டு வரி வசூல் செய்கின்றனர். வரி கட்டிய ரசீதினைக் கொண்டு ஆக்கிரமிப்பாளர்கள் மின் இணைப்பு பெற்றுள்ளார்கள். இவ்வாறு இணைப்பு பெற்றவர்கள் விவரம் ஏதும் என்னிடம் இல்லை. ஆனால், புகார் மனுவில் தெரிவித்துள்ளேன் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி ஆக்கிரமிப்பினை நகராட்சி மூலம் முழுமையாக அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், முறைமன்றத்தால் வெளியிடப்படும் ஆணைகள் மீது நகராட்சியால் நடவடிக்கை எடுக்காத நேர்வில், இதுகுறித்து முறைமன்றத்திற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் புகார் அளித்து தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என்ற விவரத்தினையும் அறிந்து கொண்டேன் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

9) எதிர்மனுதாரர் தரப்பில் 25.09.2025–ல் நடைபெற்ற விசாரணையில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

10) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், எதிர்மனுதாரரின் அறிக்கை, மன்னார்குடி நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மன்னார்குடி நகராட்சி, மேலவாசல்வார்டு, பிளாக் 3, நகர சர்வே எண். 80/1, பாமணியாற்றின் சர்க்கார் புறம்போக்கு கடும் ஆட்சேபனைக்கு உரிய நீர்த்தடங்கல் நிலம் எனவும் இதனை ஆக்கிரமிப்பு செய்து இருந்த ஆக்கிரமிப்பாளரை அப்புறப்படுத்தி ஆக்கிரமிப்பு அண்மையில் நீக்கப்பட்டது எனவும் மீண்டும் தற்போது அதே இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளது எனவும் நகராட்சி நடவடிக்கை எடுத்து அதனை முழுமையாக ஆக்கிரமிப்பு நீக்கம் செய்து ஆக்கிரமிப்பு நீக்கம் செய்ததை உறுதி செய்யவேண்டும் என தெரிவித்து மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மனுதாரர் தெரிவித்துள்ள சர்வே எண்.80/1–ல் உள்ள நிலமானது பொதுப்பணித் துறைக்கு சொந்தமானதால் நகராட்சியால் இதுநாள்வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற நகராட்சியில் இருந்து பொதுப்பணித் துறைக்கு கடிதம் அனுப்பி

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் மன்னார்குடி நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் மனுதாரரால் புகாரில் தெரிவித்துள்ள இடமானது பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என நகரமைப்பு ஆய்வாளர் தனது வாக்குமூலத்திலும் மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கையிலும் தெரிவித்துள்ள நிலையில், மன்னார்குடி நகராட்சியினர் பொதுப்பணித்துறையுடன் இணைந்து மனுதாரரின் புகார் குறித்து உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள மன்னார்குடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்

1) திரு. R.Ma. பார்த்தீபன்,
53/1, ஆசாத் தெரு,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம் – 614 001

2) நகராட்சி ஆணையர்,
மன்னார்குடி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

23/12/25
செயலாளர்
23/12/25